

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எள்ளுவிளை ஊராட்சியில், 68-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் இன்று (26.01.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வாக்காளர் உறுதிமொழியினை அனைத்து அரசு அலுவலர்களும், பொதுமக்களும் ஏற்றுக்கொண்டனர்.

செ.வெ.எண்: 71/2017 நாள்: 26.01.2017

**இராஜாக்கமங்கலம் ஊராட்சியில் இன்று (26.01.2017) நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்பு.**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், எள்ளுவிளை ஊராட்சியில், 68-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு இன்று (26.01.2017) கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

கிராமசபைக் கூட்டத்தில், ஆகஸ்ட் 2016 முதல் டிசம்பர் 2016 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்தும், 2017-18-ம் நிதியாண்டில், பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கும் ஊராட்சி, வளர்ச்சி பணிகளுக்கான திட்ட அறிக்கையினை குறித்தும், சுகாதாரம் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் குறித்தும், தாய்த்திட்டம் குறித்தும், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்ட பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விவரங்கள் குறித்தும், மகளிர் திட்டம் குறித்தும், புதுவாழ்வு திட்டம் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்தும், பொதுவிநியோக திட்டம் குறித்தும் மற்றும் ஊராட்சியின் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் வரவு, செலவு கணக்குகள் ஆகியன விவாதிக்கப்பட்டது.

பின்னர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான். இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததாவது:-

மக்களின் பங்கேற்புடன் ஒளிவு மறைவற்ற முறையில் கிராம நிர்வாகம் நடைபெறவேண்டும் என்பதற்காக, கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அந்த ஊராட்சியில் மேற்கொண்ட வரவு, செலவு கணக்குகள் பொதுமக்களுக்கு இன்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, கடந்த நிதியாண்டில் இந்த ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித்திட்டப்பணிகள், சுகாதாரப்பணிகள், குடிநீர் மற்றும் சாலைப்பணிகள் பொதுமக்களுக்கு ஊராட்சி அலுவலர்கள் மூலம் எடுத்துக் கூறப்படுகிறது.

நமது மாவட்டத்தில் ஆதார் எண் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக பதிவு செய்ய வேண்டும். தற்போது 94 சதவீதம் குடும்ப அட்டைத்தாரர்கள் பதிவு செய்துள்ளார்கள். மீதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் உடனடியாக பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால், அரசு வருகிற மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திலிருந்து ஸ்மாட் கார்டு வழங்கும் திட்டத்தை துவங்கவுள்ளது. மேலும், கடந்த ஆண்டை விட 40 சதவீதம் மழை குறைந்துள்ளதால், அணையின் நீர்மட்டம் குறைந்துள்ளது. எனவே பொதுமக்கள் தண்ணீரினை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதை போல், பொதுமக்கள் தங்களது வீடு மற்றும் வீட்டின் அருகில் உள்ள பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொண்டால், டெங்கு போன்ற காய்ச்சலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள

முடியும். மேலும் சுகாதாரப்பணியாளர்களுக்கு டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள, நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். மேலும் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்க நீங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், வாக்காளர் உறுதி மொழி அனைத்து அரசு அலுவலர்களும், பொதுமக்களும் ஏற்றுக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து, சுகாதாரத்துறை மூலம் வைக்கப்பட்டிருந்து நிலவேம்பு குடிநீர் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு புகைப்படங்களையும், இலவச கண் பரிசோதனை முகாமினையும் பார்வையிட்டார்.

கிராமசபைக் கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி டி.கெட்சி லீமா அமலினி, கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சின்னம்மாள், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) திரு. விநாயக சுப்பிரமணியன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. அருளரசு, அகஸ்தீஸ்வரம் வட்ட வழங்கல் அலுவலர் திரு. கோலப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.